செ.வெ.எண்: 188 10/5/2018

ந.க.728/2018/எஸ்1
நாள்.09.05.2018

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
காஞ்சிபுரம்.

# பத்திரிக்கைச் செய்தி

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 9 (ஒன்பது) வட்டங்களில் உள்ள பகுதியில் குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு கீழ் குறிப்பிட்டுள்ள மையங்களில் மே 2018 மாதத்திற்கான மாதாந்திர பொதுவிநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 12.05.2018 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது. இச்சிறப்பு கூட்டத்தில் மின்னனு குடும்ப அட்டையுடன் புகைப்படம் பதிவேற்றம் செய்யதல், ஆதார் எண் மற்றும் தொலைப்பேசி எண் இணைத்தல், தமிழாக்கம் செய்தல், பெயர் மற்றும் முகவரி மாற்றம் மற்றும் இதர திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள கிராமங்களை சுற்றியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண். | வட்டம் | குறைதீர் கூட்டம் நடைபெறும் கிராமம் | முகாம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | வலத்தூர் | நியாய விலைக் கடை |
| 2 | திருப்பெரும்புதூர் | மொளச்சூர் | நியாய விலைக் கடை |
| 3 | உத்திரமேரூர் | ராவத்தநல்லூர் | நியாய விலைக் கடை |
| 4 | செங்கல்பட்டு | ரத்தினமங்கலம் | நியாய விலைக் கடை |
| 5 | திருக்கழுக்குன்றம் | எம்.என்.குப்பம் | நியாய விலைக் கடை |
| 6 | திருப்போரூர் | சிறுநாகலூர் | நியாய விலைக் கடை |
| 7 | மதுராந்தகம் | பேரம்பாக்கம் | நியாய விலைக் கடை |
| 8 | செய்யூர் | அனுமந்தபுரம் | நியாய விலைக் கடை |
| 9 | வாலாஜாபாத் | மேல்புதூர்,கீழ்புதூர் | நியாய விலைக் கடை |

ப.முரளி,
மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்(பொ),
காஞ்சிபுரம்.

//உத்தரவுப்படி//

மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின்
நேர்முக உதவியாளர்,
காஞ்சிபுரம்.